DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.194/2022**

**2025-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 04- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.1 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | ஹவுஸ் கீப்பிங் |
| பெயர் | - | ஆனந்த் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | அருமைநாயகம் | சமயம் | - | |
| கிராமம் | - | கக்கன்காலனி | வயது | - | 43/2025 |
| சாதி | - | | | | |

**<u>04-08-2025</u>**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)
(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311-ன் கீழ் தாக்கல் செய்த மனு Ecrlmp.No.845/2025 அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்ப அழைத்து விசாரிக்கப்பட்டார்.)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் யார் வீட்டில் குடியிருக்கிறேன் என்றால் சிபு என்பவர்வீட்டில் குடியிருக்கிறேன் அது எத்தனை மாடி கட்டிடம் என்றால் 4 மாடி கட்டிடமாகும். 4 மாடிகட்டிடத்தில் யார் யார் குடியிருந்தார்கள் என்றால் நான், ரமேஷ் என்பவரின் குடும்பம், தனலட்சுமி என்பவரின் குடும்பம், வழக்கறிஞர் ஒருவர் இருந்தார் அவர் பெயர் எனக்கு தெரியவில்லை. அந்த கட்டிடத்தில் குடியிருப்பவர்களுக்கு மொட்ட மாடி பொதுவானது என்றால் சரிதான். அங்கு குடியிப்பவர்கள் தனிப்பட்ட முறையில் மொட்டமாடி சொந்தம் கொண்டாட முடியாது என்றால் சரிதான். மொட்டமாடியில் வந்து அடிக்கடி விளையாட பசங்களின் பெயர், அவர்களது பெற்றோர்களின் பெயர்கள் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கட்டிடத்தில் குடியிருக்கும் ரமேஷ் என்பவரின் பையனை தேடி மற்றவர்கள் வருவார்கள் என்றால் சரிதான். நான் ஏற்கனவே அந்த பசங்களை எச்சரித்தாக சொல்லும் தேதி நேரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அங்கு வரும் பசங்கள் அனைவரும் இந்து மதத்தை சேர்ந்தவர்கள் என்றால் அதைப் பற்றி தெரியாது.எந்த தேதியில் சம்பவம் நடந்தது என்றால் 24-12-2020-ம் தேதி நடந்தது. நான் அந்த பசங்களை அடித்ததாக என்னிடம் முதலில் வந்து கேட்டது யார் என்றால் ரமேஷ் என்பவர் கேட்டார். அந்த சமயத்தில் ரமேசுடன் வேறு யாரு வந்தார்களா என்றால் இன்னொரு நபர் வந்தார் அவர் யார் என்று எனக்குதெரியவில்லை. எந்தஇடத்தில் வைத்து பேச்சுவார்த்தை நடந்தது என்றால் அன்றைய தினம் மதியம் ரமேஷ்எனது வீட்டிற்கு வந்து பேசினார். வழக்கு சம்பவம் மாலையில் ரோட்டில் வைத்து நடந்தது. வால்பாறை அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் சுமார் 07.00 மணியளவில் சென்றேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் எஸ்எஸ்எல்சி படித்துள்ளேன். புகார் நான் எழுதினேன் என்றால் சரிதான். புகாரில் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக வேலை பார்ப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் எனக்கு 35 வயது என்றுசொல்லியுள்ளேன் என்றால்

சரிதான். நீதிமன்ற விசாரணையில் எனக்கு வயது 42 என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கிறிஸ்துவ மதத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். சம்பவத்திற்கு அடுத்துநாள் கிறிஸ்மஸ் பண்டிகை என்றால் சரிதான். நான் சொல்வது போல சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான் தவறாக எதிரியை பழிவாங்கும் என்ற நோக்கத்திற்காக புகார் கொடுத்து தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.